உ

சிவமயம்



நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும்

இல 399 ஆறுமுகம்வீதி, வட்டக்கச்சியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# சுந்தரம் பரமலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறுகுறித்த

# நினைவு மலர்

27.04.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீராமஜெயம்



நுணாவில் கிழக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் இல 399, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# சுந்தரம் பரமலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**27.04.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எமது குடும்பத்தின் ஒளிவிழக்காய் திகழ்ந்து
தான் சார்ந்த குடும்பத்தவர்களை இவ்வுலகில்
நன் மக்களாக வாழ வழிகாட்டிய எமது
குடும்பத்தின் நிழல் தரும் விருட்சமாக
இருந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் சுந்தரம் பரமலிங்கம் அவர்களின்
பாதார விந்தங்களுக்கு இந் நூலினை
சமர்ப்பணமாக்குகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்



தோற்றம்
1938.03.09

# அமரர்

மறைவு
2015.03.26

# சுந்தரம் பரமலிங்கம்

## அவர்கள்

### திதி வெண்பா

"பங்குனித் திங்களதின் பூர்வபட்ச ஸப்தமியில்
பங்கம் ஏதும்இல்லா பரமலிங்கம்
எங்கும் நிறை பரந்தாமன் – பாதமதில்
தங்கச் சென்ற நாள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் வணக்கம்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருவாக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம்கை

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனெப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவா ளுமைகோனடியெமக்
கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்


இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேலுன்னை என்றும்
மறவாமை வேண்டும் மின்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்
அடியின்கீழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுட ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கிநின்ற முகமொன்றே
மாறுபடுசூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறைஅரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

## பிறப்பு

யாழ்மண்ணில் வரலாற்று வளம் மிக்க சாவகச்சேரிப் பிரதேசத்தில் நுணாவில் கிழக்குப் பகுதியில் கந்தப்படி ஒழுங்கையில் 1938ம் வருடத்தில் பங்குனித் திங்கள் ஒன்பதாம் தினத்தில் (தமிழுக்கு ஈஸ்வர வருடம் மாசித் திங்கள் புதன் கிழமை 1937ம் வருடம் சுக்கில பட்ச அட்டமி திதியில் ரோகிணி நட்சத்திரம்) திரு. சுந்தரம் பாப்பா தம்பதியரின் தலைமகனாய் நற்கர்மாக்களின் பயனாய் மண்ணில் மலர்ந்தார். சாவகச்சேரி வாரிவனாத சிவன் திருவருளினால் அவதரித்த தம் தெய்வக் குழந்தைக்கு சிவனை நினைத்து அந்தப் பரம்பொருளின் திருநாமமாய் பரமலிங்கம் எனும் பெயரிட்டு மகிழ்ந்தனர். இவருடன் மகாலிங்கம், சாந்தலிங்கம், பத்மராணி, மாணிக்கலிங்கம் எனும் சகோதரர்கள் பிறந்தனர்.

## கல்வி

காலங்களின் நகர்வில் கல்விப் பராயத்தில் காலடி வைத்தபோது வரலாற்று சிறப்பு மிக்க சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். கல்வியில் சிறந்து விளங்கிய திரு. சு.பரமலிங்கம் அவர்கள் உயர்தரக் கல்வியையும் ஆங்கில மொழிமூலம் கற்றுத் தேர்ந்த பாடசாலைக் காலத்தில் சாரணியம் மற்றும் மேடை நாடகங்களிலும் பங்கேற்றார்.

## தொழில்

குடும்பத்தின் சூழ்நிலை காரணமாக தனது உயர்தரக் கல்வியினை இடைநிறுத்தி, கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்தியில் அமைந்துள்ள ஈஸ்வரன் அரிசி ஆலையில் முகாமையாளராக 19.63 ஆண்டு பணியில் சேர்ந்துகொண்டார். பணிக்காலத்தில் செய்தொழில் நேர்த்தியும் பூர்த்தியும் கொண்டு ஆயிரக்கணக்கான வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்றார்.

## திருமணம்

தொழில் மேன்மை கொண்ட நிலையில் மாறுபட வாழ்வின் பொதுவான நிகழ்வான திருமண பந்தத்தில் வட்டக்கச்சியில் வாழ்ந்த திரு. சிவக்கொழுந்து நாகரத்தினம் தம்பதியரின் இரண்டாவது மகளான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனேஸ்வரி (கிச்சி) அவர்களினை 1942.09.08ம் திகதி வெள்ளிக்கிழமை கைப்பிடித்து மனைத்தக்க மாண்புடையார் ஆக்கிக் கொண்டார்.

***மக்கள்***

இல்லறத்தின் பயனாக பெறுபவற்றுள் யாம் அறிந்ததிலை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற என்பதற்கிணங்க நான்கு குழந்தைகளைப் பெற்றார். மூன்று பெண் குழந்தைகளுக்கும் சிவனை நினைத்து சிவாஜினி எனவும், யாழினி, சிவதர்சினி எனவும் பெயரிட்டு வளர்த்தார். ஆண்குழந்தை இல்லை என்ற கவலையில் நல்லூர் கந்தனை நினைத்து உருகி வணங்கிக் கிடைத்த குழந்தைக்கு ஆறுமுகனின் அண்ணனான ஆனைமுகனின் பெயரிட்டு கஜன் என அழைத்து மகிழ்ந்தார்.

குழந்தைகளின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டு அதுவே தன் இலட்சியமாக வாழத் தொடங்கினார். நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் தொழில் இழப்பு, தொடர் கஸ்ரங்களினை சந்தித்தாலும் மனம் தளராது தன் வாழ்க்கைப் பயணம் புதுப்புது முயற்சிகளை மேற்கொண்டார். 1979ம் ஆண்டு ஆவணி மாதம் அவரின் தற்போதைய வசிப்பிடமாக இல 399, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியில் வசிக்கத் தொடங்கினார்.

குழந்தைகளின் கல்வியே இலட்சியமாகக் கொண்டு சிவாஜினி தான் கற்ற பாடசாலையான சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், பின்னர் யாழ் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, செந்திரேசா பெண்கள்கல்லூரி ஆகியவற்றில் கற்பித்துப் பயனடைந்தார். யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம், மற்றும் களுத்துறை தேசிய சுகாதார ஆய்வு மையம் வரையிலும் சென்று மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆக்கி யாழ் போதனா வைத்திய சாலையில் பணி புரியவைத்தார். யாழினியை யாழ் பல்கலைக்கழக புவியியல் பட்டதாரியாக்கி மாவட்டச் செயலகம் கிளிநொச்சியில் பணிபுரிய வைத்தார். சிவதர்சினியை இலங்கை நூலக விஞ்ஞான சங்கத்தின் தரம் III நூலக உத்தியோகத்தராக்கி பிரதேச சபையின் நூலக உத்தியோகத்தராக் கினார். கஜனை அவனுக்குப் பிடித்த இலத்திரனியல் துறையினை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் கற்கச் செய்து அனைவரையும் தொழில் முயற்சியில் ஈடுபடச் செய்தார். இதன் மூலம் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியத்தினைச் சாதித்துக் கொண்டார். காலைவேளையில் தன் குழந்தைகள் வேலைக்குச் செல்லும் பரபரப்பினைப் பார்த்து ரசித்து அவர்களுக்கு ஓடியோடி உதவிகளைச் செய்து கொடுப்பார்.

## குழந்தைகளின் திருமணம்

குழந்தைகள் திருமண வயதை அடைந்தபொழுது சிவாஜினியை சிவச்செல்வத்திற்கும், யாழினியை கணேசிற்கும், சிவதர்சினியை செந்தூரனிற்கும் என திருமணம் முடித்துக் கொடுத்து மாங்கல்ய பந்தத்தில் இணைத்தார். கபிலா, யசிதா, பூர்வி, கோபினி, றிஷிகா என ஐந்து பெண் போற்ற பேரக்குழந்தைகளை பெற்று மகிழ்ந்தார்.

## ஆலய வழிபாடு

ஆலய வழிபாடு மனிதனுக்கு இன்றியமையாதது என்பதனை என்றென்றும் மனதில் கொண்டு வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள், ஆறுமுகம்வீதி அம்மன் கோயில், (ராசக்காவின் அம்மன் கோயில்) ஆறுமுகம்வீதி முருகன்கோயில், இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் கோயில், கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் ஆகியவற்றில் மிக்க ஈடுபாடு கொண்டு விழங்கினார். ஆனாலும் ராசக்காவின் அம்மனிலும், கண்ணனிலும் அதீத ஈடுபாடு கொண்டு குலதெய்வமாகக் கொண்டாடி மகிழ்ந்தார். கண்ணனின் கிருஸ்ணஜெயந்தியிலும், அம்மனின் ஆனித் திங்களின் ஆண்டுப் பொங்கலிலும் முன்னின்று தானே செவ்வனே செய்து முடிப்பார். கனகாம்பிகை அம்மனின் மகோற்சவத்தின் ஆறாம் திருவிழாவிலும், கந்தனின் கந்தசஷ்டியிலும் தனது பங்களிப்பை சிறப்பாகச் செய்து முடிப்பார். கண்ணனின் திருநாமம் எப்போதும் அவரின் நெற்றியிலும் மனதிலும் இருக்கும். அம்மா பகவானையும் மனதார நினைத்து மூலமந்திர ஜெயம் செய்து வைத்தார். ஆஞ்சனேயரையும் தினமும் பூசித்து வந்தார்.

வாழ்வின் காலவோட்டத்தில் எல்லோருக்கும் பொதுவான முதுமையிலும் அவரின் முயற்சிக்குகுறைவேதும் இருந்ததில்லை. புதுப் புது முயற்சிகள் மேற்கொள்வார். அவை வெற்றியளிக்காதுவிடின் கவலை என்பதில்லை. எந்தவொரு வேலையையும் செய்வதில் நேர்மையும் கொண்டவர். கல்வி என்பது பொதுவானது. லட்சுமியைவிட சரஸ்வதிதான் வீட்டிற்கு முக்கியம் என எப்போதும் கூறுவார். யார் பிள்ளைகள் என்றாலும் கல்விக்காக எதையும் செய்வார். எந்த இடத்திற்குச் சென்றாலும் தர்மம். ஆண்மீகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் புத்தகங்கள் வாசிக்கின்ற பழக்கத்தை இளமை முதல் இறுதிக் காலம் வரையும் கொண்டிருந்தார். கொழும்பில் சில வருடங்கள் வாழ்ந்த காலத்தில் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு தினமும் செல்வார். இலக்கிய கலந்துரையாடல்களில் கலந்து கொள்வார்.

ஒருவருக்கும் தீங்கு நினைக்காது நல்லதையே செய்யவேண்டும் என்ற நற்சிந்தனை கொண்டவர்.இன்றைய அவசர உலகில் மற்றவர் களுடைய கருத்தினை காதுகொடுத்து கேட்கும் பண்பு கொண்டவர். எந்தவொரு கதையினையும் வர்ணனையுடன் விபரிப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். அது அந்தக் கதைக்களத்திற்கு நேரே எம்மை எடுத்துச் செல்லும். அவர் சிறு வயதில் எமக்கு சார்ள்ஸ் டிக்கன்ஸ்சனின் Tale of two cites, oliver twi மற்றும் சேக்ஸ்பியரின் யூலியஸ் சீசர், மற்றும் சோக்கரடீஸ் கதைகள் இன்னும் நேரே கார்த்தது போல் நினைவில் நிற்கிறது.

### *வாழ்வின் நிறைவு*

மண்ணில் மலர்ந்த உயிர்கள் மறைவது இயற்கை என்ற காரணத்தில் தானோ 18.03.2015ல் தனது 77வது அகவையில் ஒன்பதாம் நாளில் வட்டக்கச்சி பொது வைத்தியசாலைக்கு சென்றுவிட்டு திரும்பும்போது அவரின் வாழ்வின் காலங்களின் முடிவுப் புள்ளி அண்மித்தது அவனுக்கு மட்டும் தெரிந்த ஆரம்பமும், முடிவும் ஆகும். அந்த முடிவில் கட்சன்வீதிச் சந்தியிலுள்ள தேவாலயத்திற்கு முன்புறம் பேருந்துக்குக் காத்திருந்த வேளையில் கவனக்குறைவான உந்துருளி ஓட்டுனரால் விபத்துக்கு உள்ளாக்கப்பட்டு மூளைக்குள் இரத்தக் கசிவு ஏற்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு மலர்வதும், மறைவதும் இயற்கை என்பதற்கு இணங்க இவ்வுலக வாழ்க்கையை முடித்து எங்கும் நித்தியமாய் நிரந்தரமாய் நிறைந்த கண்ணனின் திருவடியில் 26.03.2015 பிறப்பறுந்து நிறைந்துபோனார். கிளி மண்ணில் அரிசி ஆலையில் ஆரம்பித்த அவரின் வாழ்க்கைப் பயணம் தேவாலயத்திற்கு முன்புறம் ஏற்பட்ட விபத்துடன் மறைந்து போனது. இனி எம் வாழ்வின் கணத்தில் அவர் எம்முடன் இல்லை என்று உண்மை மரத்து இருக்கும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

கரம்பற்றிய நாள்முதல் கண்ணுக்குள் என்னை வைத்தாய்
வரம் தந்த தெய்வமாய் வாழ்வுடன் இணைத்தாய்
சிரம் தாழ்த்தி தொழுதாலும் ஈடாகாது உன் அன்பு
பரம் பொருளே என் பண்பாளனே

எந்தவொரு வேளையிலும் உடனிருந்து உதவினீர்
எந்தன் உறவுகளையும் உம்முடையதாக்கினீர்
சிந்தனை முழுதும் நிறைதிலவாய் நீக்கமற
வந்தனை செய்கிறது உம் நினைவு

நோய் நொடி ஏதும் வந்ததில்லை
பாய் விரித்துப் படுத்து பணிவிடைகள் செய்யவில்லை.
நீர் வருவீர் என்றெண்ணி நான் இருக்க
காலம் முழுதும் அழுதிட உயிர் உதிர்த்துப் போனீரோ!

அழுதழுது ஆறவில்லை என்மனம்
தொழுதெழும்பி வணங்கிய தெய்வங்கள் எங்கே
பழுதில்லா வாழ்வினைத் தந்த பண்பாளனே
விழுதாய் இருந்தவரே விரைந்தங்கே போனீரோ?...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புலம்பல்

அப்பா என்று அழைத்தால் தப்பாமல் அருகிருப்பீர்
செப்பு மொழியாம் செந்தமிழையும்
செம்மையாய் கற்றுத் தந்தீர்
எம் கல்விக்காய் கஸ்டங்கள் பலபட்டீர்
உம் நினைவால் வாடுகின்றோம்
எங்கு சென்றீர் அப்பாவே!

உணர்வுகளை மதித்தீர் உண்மைகளை என்றும் உரைத்தீர்
உயிர்கள் இடத்தில் அன்பு கொண்டீர்
பயிர்கள் வளர்க்க பத்து வீட்டடியில் பாடுபட்டீர்.
மண்ணையும், மரத்தையும் மனமார நம்பினீர்
எண்ணையும் எழுத்தையும் எமக்கு உரைத்தீர்
கண்ணனையும் அம்மனையும் கடவுளாய் நம்பினீர்

கலைகளையும் கவிதையையும் கற்பித்தீர்
விலையில்லா நூல்களையும் வாங்கித் தந்தீர்
நிலையில்லாததில் உலகு என்று உணர்த்தியின்று
மலை சரிந்ததாய் மறைந்து போனீரோ?

கல்வியால் உயர்ந்த உம் கண்மணிகள்
நல்வாழ்வையும் நலம்பலவும் பெறவைத்து
நிலையான வாழ்வினை வாழ
முறையாக வழி நடத்தி
விடைபெற்றீர் இவ்வுலக வாழ்விலிருந்து
மனமுடைந்து வாடுகின்றோம் அப்பாவே எங்கு சென்றீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் புலம்பல்

அண்ணனாய் அன்னையாய் அன்புடன்
வண்ணமுற எம்மை வழிநடத்தி
எண்ணறிய செய்கைகள் செய்த எம் அண்ணார் - ஏனின்று
மண்ணை விட்டு மறைந்து போனீரே
கண்கள் ஆறவில்லை, மனமோ ஓய்வில்லை.
எம் கண்ணன் இன்றில்லை என்று வதந்தி வந்தபோது
செயழிலந்து போனோம் அண்ணா
இனி எப்போ காண்போம் அண்ணா உன் உருவை.....

## உறவுகள்

இருக்கும்போது தெரியவில்லை உம் அருமை
இழந்தபின் அறிகின்றோம் உம் நினைவுகளால்
அத்தான் என்றோம், அண்ணா என்றோம்
சித்தப்பா, பெரியப்பா, மாமா என்று
மனநிறைவாய் அழைத்திட இனி
நினைவுகள் மட்டுமே.....

## சுற்றம்

பரமலிங்கம் அண்ணன் என்றால் பலமாய் இருப்பீர்
உதவிகள் செய்ய ஓடியே வருவீர்
நிறைவான வாழ்வினையே நீர் வாழ்ந்தீர்
மறையாத நினைவுகளைத் தந்துவிட்டு
மறைந்து போனீரே
உம்மைத் தெரியாத ஆட்கள் இல்லை
உண்மை அன்புடன் உணர்வுகளை மதித்தீர்
உங்கள் நினைவுக்கள் மட்டுமே இங்கு இனி எமக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள்

கடந்த ஆண்டில் கண்டோம் எம் தாத்தாவை
விட்டுப் பிரிய மனமின்றி பிரிந்து சென்றோம்
தாத்தாவே....
மீண்டும் ஒருமுறை வருவோம் என்றிருக்க - எம்
தாத்தாவே எங்கு போனீர்...
வைத்தியசாலையில் நீங்கள் இருக்க
நலம்பெற நாம் தினமும்
கடவுளை வேண்டினோம் தாத்தா - இன்று
காணவில்லை எம் தாத்தாவை....

கபிலா, யசிதா

கதை பல பேசவில்லை காணவில்லை உங்கள் முகம்
கண்ணனின் உருவில் காண்கிறோம்
எம் தாத்தா....
விரைந்து வருவோம் வருமுறை
கண்டிடுவோம் உம்முகம் என்றிருக்க
சென்றுவிட்டீர் எம் தாத்தா

பூர்வி, கோபினி

தாத்தா என அழைக்க
தூக்கி என்னை வைத்து
தோத்திரங்கள் பாட்டுகள் பல பாடி
புத்தியாய் என்னை வளர்த்த என்
தாத்தாவே தேடுகின்றேன்
ஒவ்வொரு இடமும் காணவில்லை
என் தாத்தாவே.....

நிஷிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப்பெருமாள் கோயில் பரிபாலன சபையின் ஆசியுரை

ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியில் வசித்து வந்த திருவாளர் சுந்தரம் பரமலிங்கம் அவர்கள் பல வருடங்களாக வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலய பரிபாலன சபையில் உப தலைவராக சேவை ஆற்றியுள்ளார். அவர் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பல வழிகளிலும் தன்னுடைய பங்கைப் பகட்டின்றி ஆற்றியுள்ளார். அவர் தனித்தும் சில திருப்பணிகளை ஆற்றியுள்ளதோடு மற்றவர்களையும் அறப்பணிகளில் ஈடுபட வைத்துள்ளார். அவர் கண்ணன்பால் கொண்ட அன்பின் நிமித்தம் பரிபாலனசபையோடு எப்பொழுதும் ஒத்துழைத்து கண்ணபெருமானின் சகல நிகழ்வுகளும் சிறக்க தோளோடு தோள்கொடுத்து உதவியவர். அவரின் தூய பக்தித் தொண்டிற்கு அவரது கடைசிப் பயணம் சாட்சியாக விளங்குகின்றது. "என்னை நம்பி என்னாலேயே சரணடைபவன் .எப்பொழுதும் தோழ்வியைத் தழுவுவதில்லை" கீதையில் கண்ணன்

நல்லவற்றை செய்பவன் ஒரு பொழுதும் தீய பயன்களை அடைவதில்லை. இது உறுதி கீதையில் கண்ணன்

மேற்படி கீதை வாக்கியங்கள் அவருடைய வாழ்க்கைப் பாதையின் ரகசியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மரத்தின் வேருக்கு நீர் ஊற்றுங்கால் மரத்தின் அத்தனை பகுதிகளும் செழிப்படைவது போல ஆண்டவனுக்குச் செய்யும் சேவைகள் அகிலமெல்லாம் வியாபித்து நிற்கின்றது. இப்பெருந்தகையுடைய ஆன்மா கண்ணன் கழலடியைச் சென்றிருக்கும். இது உண்மை வாக்கியம். தந்தையின் மனக்கருத்துக்கள், அபிலாசைகள் போன்றவற்றை அவரது பிள்ளைகள் ஈடேற்றி அவரது ஆன்மாவினுடைய ஆசியைப் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம். நாமும் கண்ணனது திருத் தொண்டினை சளைக்காது முன்னெடுத்துச் செல்வோம் என உறுதி எடுக்கின்றோம்.

நன்றி

"ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!"

இவ்வண்ணம் ஆலய பரிபாலன சபைக்காக

செயலாளர்:- மு. தியாகராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அப்பா தினமும் பாடும் பாடல்கள்

### சின்னச் சின்னப் பாதம்

சின்னச் சின்னப் பாதம் வைத்து கண்ணா நீ வா வா
மணி வண்ணா நீ வா வா

மல்லிகை முல்லை மலராலே
அர்ச்சனை செய்தோம் வா வா
மாதவனே! மாதவனே கேசவனே கேசவனே
யாதவனே நீ வா வா யாதவனே நீ வா வா

கலியை வெல்ல வந்தவனே அடியார்களுக்கருளிய
காரழகா மணி வண்ணா கண்ணா நீ வா வா

கண்ணில் தெரியும் காட்சியெல்லாம்
கமலக் கண்ணா உன் தோற்றம்
காலமெல்லாம் உன் அருளை
வேண்டுகின்றேன் நீ வா வா



### பகவான் மூலமந்திரம்

"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்ம புருசோத்த பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ"

### லட்சுமி ஸ்தோத்திரம்

அன்புடன் பணித்திட்டேன்
அலைமகளே வருவாய்
உன்பதம் தொழுதிட்டேன்
உயர்வுகளைத் தரும் செங்கமலத் தாயே
செல்வமெல்லாம் தருவாய்
மங்கல களங்கள் யாவும் - இங்கும்
தங்கும்படி செய்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீராம ஜெயம்

சகல ஆணான தெய்வங்களுடைய பாதம் சரணமே
சகல பெண்ணானதெய்வங்களுடைய பாதம் சரணமே
சகல கணங்களுடைய பாதம் சரணமே
படைக்கப்பட்ட பிரம்மனுடைய பாதம் சரணமே
சகல தேவர்களுடைய பாதம் சரணமே
சகல முனிவர்களுடைய பாதம் சரணமே
சகல ரிஷிகளுடைய பாதம் சரணமே
பூமா தேவியினுடைய சக்தி சரணமே
நீசனுடைய சக்திக்குச் சரணமே
அக்கினி பகவானுடைய சக்திக்கு சரணமே
வாயுவினுடைய சக்திக்கு சரணமே
ஆகாயத்தினுடைய சக்திக்கு சரணமே
சரணமே சரணமே சரணமே



## அபிராமி பாடல்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யில்லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
தூயநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக் கண்டாய்.
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதசீர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம் (சமஸ்கிருதம்)

ப்ரஹ்ம முகாரி ஸுரார்சித லிங்கம்
நிர்மல பாஷித ஸோபித லிங்கம்
ஜன்மஜ துக்த சிநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

தேவ ரிஷி ப்ரவரார்சித லிங்கம்
காம தஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப விணாஷன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த சுராசுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்



குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுலோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பார்வையர் பக்தி ப்ரவேசக லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன் புஷ்ப ஸதார்சித லிங்கம்
பராத்பரம் பராத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்

லிங்காஷ்டகம் இதம் புண்யம்
யே படேத் சிவ சன்னிதௌ
சிவலோகம் அவாப்நோதி
சிவே ந ஸஹமோததே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கிருஷ்ண கவசம்

அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் பரமாம் இதயத் தவமே
உலகக் குடையே உயிரின் கலையே
ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே!

ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ் உலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்!
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே



தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே
வேதம் விளையும் வித்தே விளையவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம்! கவசம்!

பொய்யா மொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்சஜன்யம் கன்தனை காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க
மூடர்கள் தமையும் மோகனன் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளில் மலராய் முளைத்தோன் காக்க
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க

கேலிப் பொருளை கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியைக் கண்ணன் காக்க
துன்பம் என்றொரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக! துணையே தருக!
மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக!
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடும் துன்பம் தறிகெட ஓட

திகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசைஇல தாக!
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாப் பொருளே அலையாய் வருக!
நிஷ்காமத்தில் நிறைவோன் வருக
கர்மசந் யாசக் களமே வருக!
ஞானம் யோகம் நல்குவன் வருக!
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக!

அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்!
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் விழுந்தேன் சரணம் சரணம்!
மதுசூதனனே மனிதன் சரணம்!
இருடீ கேச இயலான் சரணம்!



கீதா சாரிய கிருஷ்ணா சரணம்!
வேதா சாரிய வேந்தே சரயம்!
தேவகி மைந்தா சிறியேன் சரணம்!
யசோதா குமரா அடியேன் சரணம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை விட்டொரு உறவுகளில்லை
என்னை விட்டொரு இனியவனில்லை
நம்மை விட்டொரு நண்பர்களில்லை
நன்மையில் உன்போல் நாயகனில்லை

எங்கெங்கே நான் இருந்திடும் போதும்
அங்கங்கே நீ அருள் செய வருக!
கோசலை ஈன்ற குமரா வருக!
கோதையின் மாலை கொண்டவன் வருக!
ரகுவம் சத்தின் நாயகன் வருக!
யதுவம் சத்தின் யாதவன் வருக!
மதுவை வென்ற மாதவன் வருக!
மலைக்குடி கொண்ட மாலவன் வருக!

திருப்பதி யாளும் திருமால் வருக!
திருவரங் கத்துப் பெருமாள் வருக!
இராவணன் கொடுமை தீர்த்தாய் துன்பம்
இராவணன் எமக்கும் இன்னருள் புரிக!
கம்சன் கொடுமை களைந்தோய் வருக!
காலனை வெல்லக் கைவலி தருக!
நெற்றியில் திருமண் நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு

தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக!
கௌரவர் தம்மை களத்தில் வென்றாய்
கௌரவம் காக்க கண்ணா வருக!
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக!
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்




சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவனே நீ தயவுடன் அருள்க!
கல்லாய்ப் போனவள் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே யன்று!

உன்னால் தானே உலகம் இயக்கம்!
கண்ணனி லாமல் கடல்வான் ஏது?
கண்ணனி லாமல் கடவுளுமில்லை
கண்ணனி லாமல் கவிதையுமில்லை
கண்ணனி லாமல் காலமுமில்லை
கண்ணனி லாவிடில் காற்றே இல்லை!
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்

சத்திய நாதன் தான்களை மறவேன்
தத்துவக் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிகளில்லை நீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு!
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு!
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க!



பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவள் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல்
இன்னும் என்னும் ஆசை வராமல்
தொல்லை என்பது துளியுமில்லாமல்
தொற்றும் நோய்கள் பற்றி விடாமல்
முதுமைத் துயரம் மூண்டு விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக் காமல்

சிந்தனை கெட்டு திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கி விடாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பதினா றிளமை வழங்கு!
இப்பணி தொடர அற்புதம் காட்டு!
தளரா மேனியில் சக்தியைக் கூட்டு
தாய்போ லிருந்து சாதம் ஊட்டு!
வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு!

உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு!
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியென தலையை யசைக்க
பொலி பொலி பொலியெனப் புகழும்விளங்க
மளமள மளவென மனையருள் நீங்க
கலகல கலவென காசுகள் சேர
தளதள தளவென தர்மம் தழைக்க

வரவர வரவர வாய்ப்புகள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்!
அடியேன் வாழ்வில் நீயே கவசம்!
கவசம் கவசம் கவசம் கவசம்!
வந்தது வாழ்வில் மன்னவன் கவசம்!
கவசம் கவசம் கவசம் கவசம்!
வாழ்க்கை என்னும் கோபுரக் கலசம்!



அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் அறிவோம்!
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்
ஜெயஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா....
ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய.......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவர் திரு சுந்தரம் பரமலிங்கம் அவர்களுக்கு விபத்து நேர்ந்தபோது உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற வேளை உடனடி சிகிச்சை அளித்த வட்டக்கச்சி வைத்தியசாலை வைத்தியர், ஊழியர்கள், கிளிநொச்சி மற்றும் யாழ்போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மற்றும் அன்னாரின் இறுதி நிகழ்விலும் இறுதிப் பயணத்திலும் கலந்துகொண்ட கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர், செயலாளர், ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் தந்தவர்களுக்கும், உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும், பிரிவுத் துயரில் பங்கெடுத்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல399, ஆறுமுகம்வீதி,
வட்டக்கச்சி.


அன்புடன்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருத்தி




* அமரரைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



ஏது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
ஏது நடக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கிறது.
ஏது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
ஏது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகின்றது.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

கண்டி வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org